**தேதி :** 05.05.2026 **CC.No.:** 432/2018 PW :3 செய்யது மசூது

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு போனேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் ஓட்டல் வைத்துள்ளேன். நான் ஓட்டலில் கேசியர். நான் வீட்டிற்கு அவ்வபோது வந்து செல்வேன். எதிரி வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். எதிரி உடைத்ததாக சொல்லபட்ட கல் எவ்வளவு நீளம், அகலம் இருக்கும் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஓஸ் பைப் பிவிசி பைப்பா என்று எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 12:50:33 +0530

**தேதி :** 05.05.2026 **CC.No.:** 432/2018 PW :2 சேக்முகமது

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நானும் எனது தகப்பனாரும் சம்பவநாள் சம்பவயிடத்தில் இருந்தோம். கட்டுமான பணிக்கு கொத்தனார்கள் வந்திருந்தார்கள். 5–6 கொத்தானார்கள் வந்திருந்தார்கள். அந்த கொத்தனார்கள் பெயர் எனக்கு தெரியாது. நானும்,என் அப்பாவும் சேர்ந்து புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். புகார் மனு எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. சம்பவயிடம் வீடு ஆகும். எதிரி உடைத்த கல் அகலம் 55 அடி, உயரம் 10 அடி இருக்கும். நான் கட்டுமானம் நடைபெறும் போது வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது எதிரி 5–6 நபர்களை கொண்டு வந்து உடைத்தார். எதிரி என்ன ஆயுதத்தினால் உடைத்தார் என்று எனக்கு தெரியாது. உடைந்த சொத்துகளின் மதிப்பு எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை–இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 12:50:40 +0530

**தேதி :** 05.05.2026 **CC.No. :** 432/2018 PW :1 அபுபக்கர்சித்திக்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் நகை கடை வைத்துள்ளேன். காலையில் 9.30 மணிக்கு கடை திறப்பேன். மதியம் 3.30 மணியளவில் மதியம் சாப்பாடுக்கு செல்வேன் என்றால் சரிதான். நான் மதியம் சாப்பாட்டிற்கு சென்றபிற்பாடு எனது மகன் அசா.2 சேக் முகமது கடையில் இருப்பார் என்றால் சரிதான். கடையில் நிர்வாகம் பண்ணக்கூடிய அளவில் வேறு யாரும் கிடையாது என்றால் சரிதான். புகார் மனு எந்த தேதி கொடுத்தேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. புகார் எந்த வருடம் கொடுத்தேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. இந்த வழக்கில் எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் சான்று இந்த வழக்கில் காவல் அலுவலரிடம் கொடுத்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபோன்று கொடுக்கவில்லை. அந்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய இடத்திற்கு தெற்கே யாருடைய நிலம் உள்ளது என்றால் டிஆர்எஸ் மஜிது நிலம் உள்ளது. நாகூர்யம்மாள் நிலம் உள்ளது என்றால் நாகூர்யம்மாள் எதிரி மீது வழக்கு தொடுத்து 264/2013 என 03.11.2017 ல் எதிரிக்கு சார்பாக தீர்ப்பானது என்றால் சரிதான். எதிரி என் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.176/2016 என ஒரு வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் தீர்ப்பாகவில்லை

என்றால் சரியல்ல. தடையாணை உத்தரவு நான் வாங்கியுள்ளேன். அதை காவலர்களிடம் கொடுக்கவில்லை. கட்டுமானங்களை எதிரி கம்பி வைத்து அடித்து உடைத்தார். அந்த கம்பி 2 அடி நீளம் இருக்கும். அந்த கம்பியை நான் போலீசாரிடம் எடுத்து கொடுத்தேனா என்றால் எடுத்து கொடுத்தேன். அஸ்திவாரகல் என்ன சைஸ் இருக்கும் என்றால் 1 1/2 அடி இருக்கும். எதிரி எத்தனை கல் உடைத்தார் என்றால் எனக்கு ஞபாகம் இல்லை. என்னுடைய மனுவில் சேதாரம் குறிப்பிடவில்லை. சம்பவம் நாள் எத்தனை கொத்தனார்கள் வந்தார்கள் என்றால் 2 கொத்தனார் வந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. அந்த கொத்தனார்களை போலீசார்கள் விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள். அந்த இடம் காலிமனை என்றால் சரிதான். தண்ணீர் கொண்டு போகும் ஓஸ் பைப்பை எதிரி அடித்து உடைத்தார். ஓஸ் பைப்பை உடைக்க முடியாது என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா தெற்கே என் வகையறா காம்பவுன்ட் என்று காட்டி எழுதி வாங்கியுள்ளார் என்றால் இருக்கும். நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA | Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.05.19 12:50:49 +0530